தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர் : 02 | இதழ் :212 | 4 - பக்கம் | 28.02.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6




தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

விளக்கம்:
தகுதியுடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டே ஒருவன் முயன்று திரட்டிய பொருள் பயன்பட வேண்டும்.

## மகா கும்பமேளா வெற்றிகரமாக நிறைவடைந்தது



புதுடெல்லி: உலகின் மிகப்பெரிய ஆன்மீக விழாக்களில் ஒன்றான மகா கும்பமேளா வெற்றிகரமாக நிறைவடைந்தது. உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில் 45 நாட்கள் நடைபெற்ற இந்த மாபெரும் திருவிழா பிப்ரவரி 26 அன்று நிறைவு பெற்றது. இந்த நிகழ்வில் 66 கோடியே அதிகமான பக்தர்கள் பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடல் செய்தனர். பக்தர்களின் ஆன்மீக ஒற்றுமை இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் வலிமையை பிரதிபலித்தது.

பிரதமர் நரேந்திர மோடியின் உரை

மகா கும்பமேளா நிறைவடைந்ததை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பதிவில், "இந்த ஒற்றுமையின் யாகம் இந்தியாவின் நம்பிக்கையை ஒருங்கிணைத்தது. மகா கும்பமேளா பல நூற்றாண்டுகளாக பாரம்பரியத்தை வலுவாக வைத்திருக்கின்றது. இந்தியா தனது பாரம்பரியத்தைப் பற்றி பெருமைப்படுவதோடு, புதிய சக்தியுடன் முன்னேறி வருகிறது" என்று தெரிவித்தார். மகா கும்பமேளாவின் வெற்றியாளர்களாக நாட்டு மக்கள், பக்தர்கள், மற்றும் ஒழுங்கமைப்பாளர்கள் விளங்கியதாகவும், அவர்களது கடின உழைப்புக்கு நன்றி தெரிவித்தார். மேலும், பிரதமர் ஸ்ரீ சோமநாதர் கோவிலுக்கு சென்று நாடு முழுவதற்காக பிரார்த்திக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

முக்கிய அம்சங்கள்:

•45 நாட்கள் நீடித்த திருவிழாவில், எதிர்பார்த்ததை விட அதிகமான பக்தர்கள் பங்கேற்றனர்.

•திரிவேணி சங்கமம் பகுதியைச் சுற்றி 2000 மருத்துவ முகாம்கள் செயல்பட்டன.

•பாதுகாப்புக்காக 50,000 பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபட்டனர்.

•1000 ரயில்கள் அதிகப்படுத்தப்பட்டன, மேலும் 10,000 ரயில்வே காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

•கலாச்சார கிராமம் அமைக்கப்பட்டு பாரம்பரிய கலை, இசை, மற்றும் உணவுப் பொருட்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன.

•உலகப் புகழ்பெற்ற கங்கை ஆரத்தி நிகழ்வில் திரளான பக்தர்கள் பங்கேற்று ஆன்மிக அனுபவத்தை பெற்றனர்.

பிரபலங்களின் பங்கேற்பு

இந்த நிகழ்வில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். விளையாட்டு வீரர்களான சாய்னா நேவால், சுரேஷ் ரெய்னா, திரைப்பட பிரபலங்கள் கத்ரீனா கைஃப், ரவீனா டாண்டன் உள்ளிட்ட பலரும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடலில் கலந்துகொண்டனர்.

## இந்துக்களுக்கு துப்பாக்கி உரிமம் தரும் விதிமுறைகளை தளர்த்த வேண்டும்: உ.பி முதல்வர் யோகிக்கு சர்ச்சை துறவி கடிதம்




புதுடெல்லி: உத்தர பிரதேசத்தில் இந்துக்களின் பாதுகாப்புக்கு துப்பாக்கி உரிமம் தரும் விதிமுறைகளை தளர்த்த முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு சர்ச்சை துறவியான யத்தி நரசிங்கானந்த் கடிதம் எழுதியுள்ளார்.

உ.பி.யின் காஜியாபாத்தில் உள்ள தாஸ்னா தேவி கோயில் மடத்தின் தலைவர் சுவாமி யத்தி நரசிங்கானந்த். இவர் இஸ்லாமியர்களுக்கு எதிராக அவ்வப்போது பேசி வருவதால் சர்ச்சைக்குள்ளானவர்.

இதுதொடர்பான புகார்களில் சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீன் பெற்றவர். இந்நிலையில் யத்தி நரசிங்கானந்த் சமீபத்தில் அவசர கூட்டம் நடத்தி ''இந்துக்கள் அனைவரும் பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கிகள் வைத்திருக்க வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றினார்.

அதன்பின் முதல்வர் ஆதித்யநாத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் நரசிங்கானந்த் கூறும்போது, ''துரதிருஷ்டவசமாக அரசியல்வாதிகளில் இந்துக்களும், இந்து தலைவர்களும் மதத்தை பாதுகாப்பதில் அக்கறை காட்டுவதில்லை. தன்னை தானே பாதுகாக்க இந்துக்கள் துப்பாக்கிகளை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக துப்பாக்கி உரிமம் கேட்டு விண்ணப்பிக்கும் இந்துக்களுக்காக அதன் விதிமுறைகளை தளர்த்தி உத்தரவிட வேண்டும்'' என்று கோரியுள்ளார். உ.பி.யில் உயர்வகுப்பினர், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோரில் பலரும் துப்பாக்கிகளை வைத்திருப்பது வழக்கம். இன்னும் சிலர் துப்பாக்கிகள் ஏந்திய போலீஸ் அல்லது தனியார் பாதுகாவலர்களை வைத்து கொள்கின்றனர். துப்பாக்கி வைத்திருப்பதை அவர்கள் கவுரவமாகவே கருதுகின்றனர். இந்த கடிதத்தை நரசிங்கானந்த் தனது ரத்தத்தில் எழுதியுள்ளார். இத்துடன், ஒரு லட்சம் பொதுமக்களிடம் கையெழுத்து பெற்று வருகிறார். இதையும் முதல்வர் ஆதித்யநாத்துக்கு அனுப்ப உள்ளார். இந்த 2 கடிதங்கள் குறித்து நரசிங்கானந்த் ஆற்றிய உரையின் காட்சிப் பதிவுகளும் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

# 25 மருத்துவமனைகளில் போதை மீட்பு சிகிச்சை, மறுவாழ்வு மையங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார்



சென்னை:பிப்-28 ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு மாநில கொள்கையினை வெளியிட்டு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.15.81 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 "கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (பிப்.27) திறந்து வைத்தார். இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (பிப்.27) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு அரசு கொள்கையை வெளியிட்டார். மேலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 "கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை திறந்து வைத்தார். ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழக அரசு கொள்கை: இக்கொள்கையில், ஆதரவற்று பொது இடங்களில் உலாவும் மன நோயர்களை அடையாளம் கண்டு மீட்பது உள்ளிட்ட பல்வேறு சேவைகளில் 'பயனாளிகளின் நலனை மையமாகக் கொண்ட, அவர்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்திய அணுகுமுறை மற்றும் அரசு துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பின் வழியாக' முழுமையான மனநல மருத்துவ சேவைகள் வழங்குவது குறித்த நெறிமுறைகள் மற்றும் இச்சேவையில் பங்காற்றக்கூடிய பல்துறை அலுவலர்களின் பொறுப்புகள் தொடர்பான விரிவான வழிமுறைகளை தெளிவுபடுத்துகிறது. ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை, இடைநிலை மருத்துவ கவனிப்பு, நீண்ட கால பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் மீண்டுமிணைதல் உள்ளிட்ட நான்கு நிலைகளிலான கவனிப்பை இக்கொள்கை வரையறுக்கிறது. மனநல சிகிச்சை முடிந்து குணமடைந்த ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களை குடும்பத்துடன் மீண்டும் சேர்த்து வைக்கவும், குடும்பத்துடன் மீண்டுமிணைய சாத்தியமில்லாதவர்களுக்கு தேவையான நல்லாதரவையும் பாதுகாப்பையும் வழங்க வலியுறுத்துகிறது. இடைநிலை கவனிப்புக்கு பின்னாலான நீண்ட கால பராமரிப்பு மற்றும் சமூகத்துடன் மீண்டுமிணைதல் தொடர்பான மறுவாழ்வு சேவைகள் பற்றி இக்கொள்கை விளக்குகிறது. இச்சேவைகளை செயலாக்கத்துக்கு கொண்டு வருவதை மாநில அளவில் மேற்பார்வையிட மாநில மனநல ஆணையத்திற்கும், மாவட்ட அளவில் கண்காணிக்க மாவட்ட மனநல குழுவுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில், ஆதரவற்ற மனநோயர்கள் நோயில் இருந்து மீண்டு, நலம் பெற்று சமூகத்தில் மதிப்புமிகு உறுப்பினர்களாக வாழத் தேவையான திட்டங்களையும், சேவை வழங்குவோரின் பொறுப்புகளையும் உள்ளடக்கிய இக்கொள்கையை வெளியிடுவதன் மூலம், ஒருங்கிணைந்த மனநல மருத்துவ சேவைகளை வழங்கி, ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர் இல்லாத மாநிலமாக தமிழகத்தை திகழச் செய்ய அரசு உறுதியேற்றுள்ளது. "கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள்: தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்கிட அரியலூர், தருமபுரி, ஈரோடு, திருவாரூர், கிருஷ்ணகிரி, மதுரை, சென்னை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சி, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், சேலம், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள். சென்னை, கிண்டி-கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்பாக்கம்-அரசு மனநல காப்பகம் ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15.81 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 "கலங்கரை" ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை தமிழக முதல்வர் இன்றையதினம் திறந்து வைத்தார். ஒவ்வொரு மையத்துக்கும் மனநல மருத்துவர் தலைமையில், ஆற்றுப்படுத்துநர், சமூகப் பணியாளர், செவிலியர், பாதுகாவலர், மருத்துவமனை பணியாளர், துப்புரவு பணியாளர் என ஆறு மனநல மருத்துவப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, தரமான சிகிச்சை வழங்கப்படும். அனைத்து மையங்களிலும் ஒரே வகையில் சிறப்பான சேவைகளை வழங்குவதற்காக 'நிலையான செயல் நடைமுறைகள்' வரையறுக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மற்றும் உளவியல் சிகிச்சை முறைகள், மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி சேவைகள், பொழுதுபோக்கு வசதிகள், உள்ளரங்க விளையாட்டு குழு சிகிச்சை, குடும்பத்தினருக்கான ஆலோசனைகள் உள்ளிட்ட மறுவாழ்வு சேவைகளும் வழங்கப்படும். இம்மையங்களில் போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டோடு போதை மீட்பிற்கான தொடர் சிகிச்சை எவ்வித கட்டணமும் இன்றி வழங்கப்படும். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கழுக்குன்றத்தில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற அதிமுகவினர் கைது



மாமல்லபுரம்: ப்பி-28 திருக்கழுக்குன்றத்தில் அதிமுக பேரூர் செயலாளர் மற்றும் அவரது உறவினர் தாக்கப்பட்டதை கண்டித்து அதிமுகவினர் அனுமதி இன்றி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றதால், அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் ஆறுமுகத்தை போலீஸார் வீட்டில் வைத்து கைது செய்ய முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் நகரப்பகுதியில் வசிப்பவர் தினேஷ்குமார். அதிமுகவின், திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளராக உள்ளார். இந்நிலையில், இவரது வீட்டின் முன்பு சிலர் அடிக்கடி சிலர் மது அருந்தி தகராறில் ஈடுபட்டதாக தெரிகிறது. இதுதொடர்பாக, அதிமுக பேரூர் செயலாளர் திருக்கழுகுன்றம் போலீஸில் புகார் அளித்துள்ளார். இந்நிலையில், பேரூர் செயலாளர் தினேஷ்குமார், அவரது உறவினர் மோகனை அந்நபர்கள் அரிவாளால் வெட்டியதில் இருவரும் பலத்த காயமடைந்தனர். இதையடுத்து, சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்து போலீஸார், வெள்ளாளர் தெருவை சேர்ந்த வினோத்குமார் (33), திருக்கழுக்குன்றத்தை சேர்ந்த கவுரிசங்கர் (எ) அப்பு (29) ஆகியேரை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், இச்சம்பவத்தை கண்டித்து முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் அதிமுகவினர் அனுமதி இன்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர். அனுமதி இல்லாததால் மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மதுராந்தகம் எம்எல்ஏ. மரகதம் உள்ளிட்ட அதிமுகவினரை போலீஸார் அவரது வீட்டில் வைத்து கைது செய்ய முயன்றதால் போலீஸாருக்கும் அதிமுகவினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதனால், அப்பகுதியில் ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் திருக்கழுக்குன்றம் நோக்கி வரும் அதிமுகவினரை, தடுத்து நிறுத்தி ஆங்காங்கு போலீஸார் கைது செய்து வருகின்றனர்.

## உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் வகையில் சென்னை மருத்துவ கல்லூரியில் மாணவர் தூதுவர் குழு



சென்னை:பிப்-28 சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை - சென்னை மருத்துவக் கல்லூரியில் உறுப்பு தான மாணவர் தூதுவர் குழு நேற்று தொடங்கப்பட்டது. அதற்கான இலச்சினையை கல்லூரி முதல்வர் டீன் தேரணிராஜன், துணை முதல்வர் கவிதா ஆகியோர் வெளியிட்டனர். மருத்துவ கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், இளநிலை மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் மாநில உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலர் என். கோபாலகிருஷ்ணன் பேசியதாவது: இந்திய அளவில் தமிழகம் தொடர்ந்து உடல் உறுப்பு தானத்தில் முதலிடத்தில் உள்ளது. ஒருவர் மூளைச்சாவு அடையும்போது, அதனை குறிப்பிட்ட கால இடைவெளியில், உரிய மருத்துவ அறிவியல் முறையில் உறுதி செய்வது அவசியம். அதன் பின்னர், சம்பந்தப்பட்ட நோயாளியின் உறவினர்களிடம் ஆலோசித்து உறுப்பு தானத்துக்கு ஒப்புதல் பெறுவது முக்கியம். அதைத்தொடர்ந்து உறுப்புகளை முறையாக அகற்றி, பாதுகாப்பாக மற்ற நோயாளிகளுக்கு பொருத்த வேண்டும். இந்த நடைமுறைகளுக்குள் மருத்துவரீதியாகவும், சட்ட ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பல்வேறு சிக்கல்களும், சவால்களும் உள்ளன. அது தொடர்பான புரிதலை சமூகத்தில் ஏற்படுத்தினால் மட்டுமே உறுப்பு தானத்தை பரவலாக அதிகரிக்க முடியும். அதைக் கொண்டு கல்லூரிகளில் உறுப்பு தான மாணவர் தூதுவர் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது. முதல்கட்டமாக சென்னை மருத்துவ கல்லூரியில் அத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர், துணை முதல்வர் மற்றும் பேராசிரியர்களின் வழிகாட்டுதலில் இக்குழு இயங்கும். இக்குழுவில் இணையும் மருத்துவ இளநிலை மாணவர்களுக்கு உறுப்புதானம் குறித்த பயிற்சி வழங்கப் படும். அவர்கள் சமூகத்தில் உறுப்பு தானத்தை ஊக்குவிப்பதற்கான தூதர்களாக செயல்படுவார்கள்.

# அரசு வேலை உரிமை மீட்பு போராட்ட குழு நடத்திய தெருமுனை கூட்டம்

சேலம் கோட்டை மைதானத்தில் இன்று மாலை அரசு வேலை உரிமை மீட்பு போராட்ட குழுநடத்தியதமிழ்நாட்டில் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு வேலைகள் அனைத்தும் தமிழருக்கே என்ற கோரிக்கையோடு தமிழ்நாடு தழுவிய பரப்புரை இயக்கம் தெருமுனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனின் மக்கள் விடுதலை பா.




செல்வகுமார் அவர்கள் உரை கசி.விடுதலை தலைமை ஏற்க விளக்க குமரன், அருணாச்சலம். சிறப்பு அழைப்பாளர்கள் ஜங்ஷன் அண்ணாதுரை மாநிலத் தலைவர் அம்பேத்கர் மக்கள் இயக்கம், காஜாமைதீன் வடக்கு மாவட்ட செயலாளர் விடுதலை சிறுத்தைகள், சி.எம்.. சுலைமான் மாநிலச் செயலாளர் மக்கள் தேசம் கட்சி, பூமணி மாநில தலைவர் தமிழ்நாடு மக்கள் உரிமை கட்சி மற்றும் பல்வேறு சார்பு கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் சார்பில் நந்திவரம்,கூடுவாஞ்சேரி பொதுக்குழு ஆலோசனை கூட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் வியாபாரிகள் சங்கம் நந்திவரம் கூடுவாஞ்சேரி சார்பில் பொது குழு ஆலோசனை கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு செங்கல்பட்டு வடக்கு மாவட்டத் தலைவர் எம். இந்திரஜித் தலைமையில் நடைபெற்றது. மேலும் மாநிலத் தலைவர், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, தேசிய துணை தலைவர், அகில இந்திய வணிகர் சம்மேளனம் தென்பாண்டி சிங்கம் திரு டாக்டர் ஏ.எம். விக்கிரம ராஜா சங்க கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கினார். மேலும் வியாபாரிகளின் நலன்களைப் பற்றியும் சங்கத்தை பற்றியும்




ஆலோசனை வழங்கி மாநாட்டை பற்றியும் வியாபாரி சங்க நிர்வாகிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்று, மாநாட்டில் மகளிர் அணி பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், போக்குவரத்து வசதிகளை பெற்றுத் தரப்பட வேண்டும், உணவுகள் சமபந்தி செய்யப்பட வேண்டும், பல்வேறு கோரிக்கைகளைவைத்தார். மேலும் வியாபாரி சங்க நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் மற்றும் புதிய நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து குத்துவிளக்கு ஏற்றினார். மேலும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த மாவட்டத் தலைவர் எம்.இந்திரஜித் பாராட்டி சால்வை அணிவித்து வாழ்த்துக்களை கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாநிலத்துணைத் தலைவர்எஸ்மகேஸ்வரன், ஜி பிரபாகரன், எஸ். சேகர், மாநில இணைச்செயலாளர் ஹாஜிமக்காசலீம்,மாவட்ட செ.செ.வடக்கு பி.லிங்கம், மாவட்ட பொ.செ .வடக்கு மன்சூர் அலி, செயலாளர் ந கூடுவாஞ்சேரி ஆர்டிஸ்கோ கணேசன்,பொ. ந கூடுவாஞ்சேரி எஸ் குமார் ஆர் தேவராஜ் ஏ ஜே இ சந்திரசேகரன் எஸ். மாணிக்க ராஜா சிறப்பு விருந்தினர் மாநில பொதுச் செயலாளர் வி கோவிந்தராஜுலு, மாநில பொருளாளர் எ.எம். சதக்கத்துல்லா, காஞ்சி மண்டல தலைவர் எம். அமுல்ராஜ்மற்றும்மாநிலம் மாவட்டம் வட்டம் அனைத்து வியாபாரி சங்க நிர்வாகிகளும் அனைவரும் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை

தஞ்சாவூர் பிப்ரவரி 28 மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்ன் CSR (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு) நிகழ்ச்சி தஞ்சாவூர்மலபார்கோல்டு டைமண்ட்ஸ்&கிளையின் சார்பாக தஞ்சாவூர் சங்கீத மஹாலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக திரு. சண். இராமநாதன் (தஞ்சாவூர் மாநகராட்சி மேயர்). டாக்டர்அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர்) ஆகியோர் கலந்து கொண்டு அரசு பள்ளி மாணவிகளின் நலனிற்காகவும் அவர்களின் வாழ்க்கை தரத்தையும்




உயர்த்துவதற்காக இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள25அரசுபள்ளிகளை சேர்ந்த 120 மாணவிகளுக்கு CSR (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு) மலபார் குழுமம்சார்பாகமொத்தம் சுமார் ரூபாய் 10,15,000/ (பத்துஇலட்சத்துபதினாறு ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலையை மாணவிகளுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திரு.சுதிர் முகமது (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்தமிழ்நாடு கிழக்குமண்டலதலைவர், திரு முஹமது பாஹிஸ் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தஞ்சாவூர் கிளை இணை தலைவர் ஆகியோர் உடனிருந்தார். இவை தவிர மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகப்பொறுப்பு முன் முயற்சிகள் இதரகாரணங்கள் ஆகும். தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவிதத்தை சுகாதாரம், கல்வி வீட்டு வசதி, சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

# முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா 77வது பிறந்தநாள் விழா

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் நகராட்சியில் புரட்சித்தலைவி முன்னாள் முதலமைச்சர் அம்மாவின் 77 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக பொதுச்செயலாளர் வழிகாட்டுதலின் பேரில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லப்பாக்கம் ராஜேந்திரன் மேற்பார்வையில் NH 3, 9 வது வார்டு கிளைக் கழகம் , நகர அம்மா பேரவை இணைச் செயலாளர் சத்யராஜ் ஏற்பாட்டில், மக்கள் மனதில் வாழ்ந்து



கொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும், மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் இந்நிகழ்வு எம். ஜி.கே.கோபி கண்ணன் மறைமலைநகர்முன்னாள் நகர மன்ற தலைவர், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஏழை எளியவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும், அன்னதானம் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கி, நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.மேலும் நிகழ்ச்சியின் எட்டாவது வார்டுநகரகழகசெயலாளர் தசரதன், பிச்சிப்பிள்ளை , பாளையம் மற்றும் மகளிர் அணிமுக்கியநிர்வாகிகள், மேலும் இந்நிகழ்வு சிறப்பிக்கும் விதமாக மறைமலை நகராட்சி முக்கிய நகரக் கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக பொறுப்பாளர்கள், நகர அமைப்புசாரா அணி பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி மேலும் சிறப்பிக்கும் விதமாக பொதுமக்களும் மன நெகழ்ச்சியுடன் பெருந்திரளாக கலந்து கொண்டு புரட்சித்தலைவி அம்மாவின் பிறந்த நாள் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

# தேனி: சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு கைதான தம்பதிக்கு 20 ஆண்டுகள் சிறை

தேனி, பிப்.28

தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதியை சேர்ந்தவர் அழகுராஜா(32). இவரது மனைவி ராமலட்சுமி(25). ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டவரான ராமலட்சுமி, தங்கள் குடும்ப பிரச்சினைகள் தீர்வதற்கு ஜோதிடர் ஒருவரை சந்தித்து பரிகாரம் கேட்டுள்ளார்.

இதற்கு அந்த ஜோதிடர், வயது குறைந்த பெண்ணுடன் ராமலட்சுமியின் கணவர் பாலியல் உறவு கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு செய்தால் அவர்களின் குடும்ப பிரச்சினைகள் தீரும் என்றும் கூறியுள்ளார். இதனை நம்பிய ராம லட்சுமி, இந்த பரிகாரத்தை செய்வதற்காக தங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்லும் உறவினர் ஒருவரின் 14 வயது மகளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளார்.

இதன்படி, அந்த சிறுமியை தனது வீட்டிற்கு வரவழைத்த ராமலட்சுமி, தனது கணவரையும், சிறுமியையும் ஒரே அறைக்குள் வைத்து பூட்டியுள்ளார். பின்னர் அழகுராஜா சிறுமியை பலவந்தப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். சிறுமியை ஒருநாள் முழுவதும் தங்கள் வீட்டில் அடைத்து வைத்திருந்த ராமலட்சுமி, மறுநாள் எதுவும் நடக்காதது போல் சிறுமியை அவரது வீட்டிற்கு அழைத்து சென்று விட்டுள்ளார்.

பின்னர் சிறுமி தனது பெற்றோரிடம் தனக்கு நடந்தது குறித்து கண்ணீருடன் கூறியுள்ளார். இதையடுத்து, சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில், போலீசார் வழக்குப்பதிவு செய்து அழகுராஜா மற்றும் அவரது மனைவியை கைது செய்தனர். இந்த வழக்கு தேனி மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, குற்றம்சாட்டப்பட்ட அழகுராஜா மற்றும் அவரது மனைவி ராமலெட்சுமி ஆகியோருக்கு தலா 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், மொத்தம் ரூ.19 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி கணேசன் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிவாரணமாக அரசு ரூ.1 லட்சம் வழங்க வேண்டும் என்றும், சிறுமியின் பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.5 லட்சம் வைப்புத் தொகையாக செலுத்தி அதில் இருந்து வரும் வட்டித் தொகையை சிறுமியின் பராமரிப்பு செலவுக்கு மாதம்தோறும் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

# தமிழ்நாட்டில் 8 தொகுதிகள் குறைய காரணம் இதுதான்; மற்ற மாநிலங்களின் நிலை என்ன?


சென்னை பிப்.28

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமையை பெற்ற இந்தியாவில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் இருக்கின்றன. மொத்தம் 543 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன.

அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 80 தொகுதிகள் இருக்கின்றன. அடுத்த 4 இடங்களில், மராட்டியம் 48, மேற்கு வங்காளம் 42, பீகார் 40, தமிழ்நாடு 39 தொகுதிகளை கொண்டிருக்கின்றன.

இந்த தொகுதிகள் எல்லாம் 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி வடிவமைக்கப்பட்டவை. அப்போது, நாட்டில் இருந்த மக்கள்தொகை 121 கோடியே 5 லட்சம். அந்த நேரத்திலேயே, நாட்டில் அபரிமிதமான மக்கள்தொகையை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாநில அரசுகளையும் பின்பற்ற வலியுறுத்தியது.

அந்த காலக்கட்டத்தில்தான், "நாம் இருவர்; நமக்கு இருவர்" என்ற கோஷம் நாடு முழுவதும் ஓங்கி ஒலித்தது. இதை தமிழக அரசும் கையில் எடுத்து, மாநிலத்தில் மக்கள்தொகையை கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. அதன்படி, தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்கள் மக்கள்தொகையை கட்டுப்படுத்தி இருக்கின்றது. ஆனால், மத்திய அரசின் கோரிக்கையை மதிக்காத பல மாநிலங்களில்



மக்கள்தொகை அதிகரித்து இருக்கின்றது.

இன்றைக்கு இந்தியாவின் மக்கள்தொகை 145 கோடியை கடந்து உலக அளவில் முதலிடம் பிடித்துள்ளது. நீண்ட பல காலமாக முதலிடத்தில் இருந்த சீனா, 2வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இப்போது பிரச்சினை என்னவென்றால், மக்கள்தொகையை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசின் உத்தரவை மதித்து நடந்து கொண்ட மாநிலங்களுக்கு புதிய சிக்கல் உருவாகியுள்ளது. அதாவது, அடுத்த ஆண்டு (2026) மத்திய அரசு நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பை மேற்கொள்ள இருக்கின்றது.

தொகுதி மறுசீரமைப்பு என்பது மக்கள்தொகை அடிப்படையில்தான் மேற்கொள்ளப்படும். அப்படி பார்க்கும்போது, தமிழ்நாட்டில் மக்கள்தொகை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், 8 நாடாளுமன்ற தொகுதிகள் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, 39 தொகுதிகளில் இருந்து 31 தொகுதிகளாக குறைய வாய்ப்பு இருக்கிறது.

இதனால், தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் நிதி பகிர்வு குறைவதுடன், நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி.க்களின் எண்ணிக்கையும் குறையும். இது, நாடாளுமன்றத்தில் தமிழக மக்களுக்காக ஒலிக்கும்குரலைகுறையச் செய்துவிடும்.

எனவே, இந்த பிரச்சினை குறித்து உடனடியாக விவாதிப்பதற்காக தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடுத்த மாதம் (மார்ச்) 5ந் தேதி சென்னை தலைமைச்செயலகத்தில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டியிருக்கிறார். இதில் பங்கேற்க இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 45 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சரி, இனி மக்கள்தொகை குறைப்புநடவடிக்கையில் ஈடுபடாத எந்தெந்த மாநிலங்களுக்கு தொகுதிகள் அதிகரிக்கிறது?, அதை முறையாக பின்பற்றிய எந்தெந்த மாநிலங்களுக்கு தொகுதிகள் குறைகிறது? என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

அசாம் (18), மராட்டியம் (48) ஆகிய 2 மாநிலங்களுக்கு தொகுதி மறு சீரமைப்பால் எந்த பாதிப்பும் இருக்காது என்று தெரியவந்துள்ளது.

அதே நேரத்தில், தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் 31 ஆக குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல், ஆந்திரா தெலுங்கானா42ல்இருந்து 34 ஆகவும், கேரளா 20ல் இருந்து 12 ஆகவும், மேற்கு வங்காளம் 42ல் இருந்து 38 ஆகவும், ஒடிசா 21ல் இருந்து 18 ஆகவும், கர்நாடகா 28ல் இருந்து 26 ஆகவும், இமாச்சல பிரதேசம் 4ல் இருந்து 3 ஆகவும், பஞ்சாப் 13ல் இருந்து 12 ஆகவும், உத்தரகாண்ட் 5ல் இருந்து 4 ஆகவும் தொகுதிகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில், உத்தரபிரதேசம் 80ல் இருந்து 91 ஆக தொகுதிகளை அதிகரித்துக்கொள்கிறது. அதேபோல், பீகார் 40ல் இருந்து 50 ஆகவும், ராஜஸ்தான் 25ல் இருந்து 31 ஆகவும், மத்திய பிரதேசம் 29ல் இருந்து 33 ஆகவும், ஜார்கண்ட் 14ல் இருந்து 15 ஆகவும், அரியானா 10ல் இருந்து 11 ஆகவும், குஜராத் 26ல் 27 ஆகவும், டெல்லி 7ல் இருந்து 8 ஆகவும், சத்தீஸ்கர் 11ல் இருந்து 12 ஆகவும் தொகுதிகளை அதிகரித்துக்கொள்கிறது.

அதாவது, 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசுஅறிவுறுத்திய மக்கள்தொகை குறைப்பு நடவடிக்கையை பின்பற்றாத மாநிலங்களில் தொகுதிகள் அதிகரிக்கப் போகிறது. மத்திய அரசின் உத்தரவை பின்பற்றிய மாநிலங்களுக்கு தொகுதிகள் குறைய உள்ளது. எனவே, மத்திய அரசு இந்த விஷயத்தில் ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும்என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# பணம் கேட்டு மிரட்டியதால் மகனை பெட்ரோல் ஊற்றி எரித்துக்கொன்ற தாய்



திருவள்ளூர் பிப்.28

திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் தொடுகாடு கிராமம், நமச்சிவாயபுரம், கிருஷ்ணர் கோவில் தெருவை சேர்ந்தவர் ஜெயந்தி (43 வயது). இவர் தொடுகாடு பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலையில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகன் கிருஷ்ணமூர்த்தி (27 வயது). இவருக்கு பாரதி (23 வயது) என்ற மனைவியும்,2மகன்களும் உள்ளனர். கிருஷ்ணமூர்த்திக்கு வேலை கிடைக்காததால் வீட்டிலேயே இருந்து வந்தார்.

அவர் தன்னுடைய தாய் ஜெயந்தியிடம் தான் புதிதாக தொழில் செய்ய உள்ளதாகவும் அதற்கு பணம் கொடுத்து உதவிசெய்ய வேண்டும் என்று தொடர்ந்து கேட்டு அவரிடம் தகராறு செய்து வந்தார். கடந்த 24ந்தேதியன்று காலை கிருஷ்ணமூர்த்தி மீண்டும் தன்னுடைய தாயாரிடம் தான் தொழில் செய்யபோவதாகவும், அதற்குகாலம்தாழ்த்தாமல் பணம் கொடுக்க வேண்டும் என்றுதாயாரை பணம் கேட்டு தகராறு செய்து அவரை மிரட்டியுள்ளார். அப்போது அவர்கள் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

பணம் தர முடியாது என்று மறுப்பு தெரிவித்த ஜெயந்தி எந்த வேலைக்கும் செல்லாமல், வீட்டில் இருந்து கொண்டு என்னையே மிரட்டுகிறாயா என்று தன்னுடைய மகனை தகாத வார்த்தையால் பேசி வீட்டில் இருந்த பெட்ரோலை எடுத்து மகன் கிருஷ்ணமூர்த்தி உடலில் ஊற்றி தீ வைத்து எரித்தார். இதில் பலத்த காயமடைந்த அவர் வலி தாங்க முடியாமல் அலறி துடிதுடித்து கூச்சலிட்டார்.

அவரது அலறல் சத்தத்தை கேட்ட அவரது மனைவி பாரதி மற்றும் அக்கம் பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் உடனடியாக ஓடிவந்து அவரை மீட்டு சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த கிருஷ்ணமூர்த்தி நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனில்லாமல் பரிதாபமாக இறந்து போனார்.

இதுகுறித்து பாரதி மப்பேடு போலீசில் புகார் செய்தார். போலீசார் இது சம்பந்தமாக வழக்குப்பதிவு செய்து ஜெயந்தியை கைதுசெய்து அவரிடம் விசாரித்து வருகின்றனர். வேலை இல்லாத காரணத்தால் புதிதாகதொழில்தொடங்க பணம் கேட்டு தாயை மகன் மிரட்டியதால், ஆத்திரமடைந்த தாய் பெற்ற மகன் என்றும் பாராமல், அவரது உடலில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்துக்கொன்ற சம்பவம் தொடுகாடு பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# நாகைஇலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தற்காலிக ரத்து

நாகப்பட்டினம் பிப்.28

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கையில் உள்ள காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து நடந்து வந்தது.வானிலைமாற்றம் காரணமாக கடந்த ஆண்டு (2024) நவம்பர்மாதம் 18ந் தேதி கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மீண்டும் கப்பல் போக்குவரத்து கடந்த மாதம் (ஜனவரி) முதல் வாரத்தில் தொடங்கப்படும் என கப்பல் நிறுவனம் தெரிவித்திருந்தது. ஆனால் தொழில்நுட்ப சான்றிதழ் அனுமதி தொடர்பான பிரச்சினைகள் நீடித்து வந்ததால் கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்குவதில் தாமதம்




ஏற்பட்டது.

இதனையடுத்து, நாகை துறைமுகத்தில் இருந்து இரண்டரைமாதங்களுக்கு பிறகு இலங்கைக்கு மீண்டும் கப்பல் சேவை இம்மாதம் 22ந்தேதி தொடங்கியது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் 28ந்தேதி வரை பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படியே நேற்று முன்தினம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வந்தது. இதன் காரணமாகவங்கக்கடலில் பலத்த காற்று வீசி வருகிறது.

மோசனமானவானிலை காரணமாக கப்பலை இயக்கமுடியாதசூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் இன்று 26ந்தேதி முதல் 28ந்தேதி வரை கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படுவதாகவும், மார்ச் 1ந் தேதி முதல் கப்பல் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறும் என்றும் கப்பலை இயக்கும் சுபம் நிறுவனம் அறிவித்துள்ளது.

நாகை இலங்கை இடையே நீண்ட நாள் இடைவெளிக்குப் பிறகு கப்பல் போக்குவரத்து தொடங்கி 4 நாட்கள் நடைபெற்ற நிலையில் மீண்டும் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது சுற்றுலா பயணிகளிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## திருநெல்வேலி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை



திருநெல்வேலி பிப்28

திருநெல்வேலி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவி தொகையை பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வஹாப் அவர்கள் வழங்கினார்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்ன் CSR (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு) நிகழ்ச்சி திருநெல்வேலி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக பாளையங்கோட்டை பிபிஎல் கல்யாண மண்டபம் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திரு. மு.அப்துல் வஹாப் (பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர். கலந்து கொண்டு அரசு பள்ளி மாணவிகளின் நலனிற்காகவும் அவர்களின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவதற்காக இன்று திருநெல்வேலி, தூத்துக்குடி தென்காசி மாவட்டத்தில் உள்ள 19 அரசு பள்ளிகளை சேர்ந்த 188 மாணவிகளுக்கு CSR (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு) மலபார் குழுமம்சார்பாகமொத்தம் சுமார் ரூபாய் 15.12,000/(பதினைந்து இலட்சத்து பன்னிரண்டு ஆயிரம் ரூபாய்), மதிப்பிலான காசோலையை மாணவிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு முகமது ரியாஸ் (நிர்வாக இயக்குனர்கிங்ஸ்குழுமம் திருநெல்வேலி), திரு ராமசாமி ராஜா (நிர்வாக இயக்குனர்ராம் முத்துராம் சினிமாஸ் திருநெல்வேலி), மற்றும் திரு பாசில் கடவன் (மலபார். கோல்டு & டைமண்ட்ஸ் திருநெல்வேலி கிளை தலைவர்), ஆகியோர் உடனிருந்தார்இவைதவிர மலபார் கோல்டு 5 டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகப்பொறுப்பு முன்முயற்சிகள் இதரகாரணங்கள் ஆகும். தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம் கல்வி, வீட்டு வசதி, சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

## திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் கலந்துரையாடல் கூட்டம்

திண்டுக்கல் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சிறுபன்மையினர் நலத்துறை சார்பில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் கலந்துரையாடல் கூட்டம் மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண், சே.ச தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறு ப்பினர் சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள்

சிறுபான்மையினர் ஆணையம்குழுசெயலர், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திண்டுக்கல் கோட்டாட்சியர், திட்ட இயக்குனர், தமிழ்நாடு சிறுபான்மையினர் குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்..

## தொகுதி மறுசீரமைப்பு: அமித்ஷா குழப்பமான பதிலை அளித்துள்ளார் ஆ.ராசா எம்.பி.



சென்னை, பிப்.28

மக்களவை தொகுதி மறுசீரமைப்பு செய்தால் நாடாளுமன்றத்தில் தென்மாநிலங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கும் என்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசாதெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், "தொகுதி மறுவரையறை தொடர்பாக உள்துறை அமைச்சர் அமித்ஷா குழப்பமான பதில் அளித்துள்ளார். வட மாநிலங்களுக்கு தொகுதிகளை குறைத்து தென் மாநிலங்களுக்கு தொகுதிகளை அதிகம் கொடுத்தாலும் அநீதிதான். மக்கள் தொகை அடிப்படையில் வட மாநிலங்களுக்கு அதிக தொகுதிகளை வழங்கினாலும் எங்களுக்கு அநீதிதான். மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே தொகுதி மறுசீரமைப்பு செய்யக் கூடாது.

மக்களவை தொகுதி மறுசீரமைப்பு செய்தால் நாடாளுமன்றத்தில் தென்மாநிலங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கும். விகிதாச்சார அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை என அமித்ஷா கூறியுள்ளது குழப்புகிறது.

மக்கள் தொகையை கட்டுப்படுத்தி இருக்கிறோம். அதனால் வளர்ச்சிப் பணிகளில் முன்னேறி இருக்கிறோம். பல்துறைகளில் தமிழ்நாடு நம்பர் இடத்தில் இருக்கிறது. இப்படி முன்னேறி இருக்கும்போது சட்டப்படி எங்களை தண்டிப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல.

மக்கள் தொகையைக் குறைக்கச் சொன்னது யார்? மத்திய அரசு. அரசாங்கத்தின் அறிவுரையைக் கேட்டதற்காக எங்களுக்கு தண்டனையா? அரசாங்கத்தின் அறிவுரையைக் கேட்காத மாநிலங்கள் எல்லாம் முன்னேறிய மாநிலங்கள் என சொல்லிவிட முடியுமா? முடியாது. ஆனால், நாங்கள் முன்னேறியுள்ளோம்" என்று அவர் கூறினார்.

## ஆட்டோபஸ் மோதல்; பள்ளி குழந்தைகள் 5 பேர் காயம்

தென்காசி பிப்.28

தென்காசிக்கு உட்பட்ட புளியங்குடியில் பள்ளி குழந்தைகளை ஏற்றிக்கொண்டு ஆட்டோ ஒன்று சென்றது. அப்போது, அரசு பஸ் ஒன்று எதிரே வந்துள்ளது. திடீரென ஆட்டோவும், பஸ்சும் நேருக்கு நேராக மோதிவிபத்தில்சிக்கியது.

இந்த சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த 5 குழந்தைகள் காயம் அடைந்து உள்ளனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு புளியங்குடியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். அவர்களில் 2 குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்துக்கான காரணம் பற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## மதுரையில் தென்மாவட்ட தபால்துறை வாடிக்கையாளர்களுக்கான குறைதீர்ப்பு முகாம்




மதுரை, பிப்.28

தென்மாவட்டங்களை சேர்ந்த தபால் துறை வாடிக்கையாளர்களுக்கான குறைதீர்ப்பு முகாம் மதுரையில் நடக்க இருக்கிறது. இது குறித்து தென் மண்டல தபால்துறைத்தலைவர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:


"மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென்மாவட்டங்களை சேர்ந்த தபால்துறை வாடிக்கையாளர்களுக்கான குறைதீர்ப்பு முகாம் வருகிற 19ந் தேதி மதுரையில் நடக்கிறது. மதுரை பீ.பி.குளத்தில் உள்ள தென்மண்டல தபால்துறைத்தலைவர் அலுவலகத்தில் நடக்க உள்ள இந்த முகாமில் கலந்துகொள்ளவிரும்பும், வாடிக்கையாளர்கள் தங்களது புகாரில் தபால் அனுப்பிய தேதி, அனுப்பியவர் பெயர், முகவரி, பெறுபவரின் பெயர் முகவரி, ரசீது எண், மணியார்டர், விரைவு தபால், பதிவுதபால் ஆகியன குறித்த விவரங்களை குறிப்பிட வேண்டும்.

சேமிப்பு வங்கிக்கணக்கு, தபால் காப்பீடு, கிராமிய தபால் காப்பீடு தொடர்பான புகார்களில் கணக்கு எண், கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர், முகவரி, பாலிசிதாரரின் பெயர், முகவரி, பணம் செலுத்திய விவரம், பணம் செலுத்திய தபால்அலுவலகம், தபால் துறையில் இருந்து பெறப்பட்ட கடிதங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை புகாருடன் இணைத்து அனுப்ப வேண்டும். வாடிக்கையாளர்கள் தங்களது புகார் குறித்து ஏற்கனவே மனு கொடுத்து தபால் கண்காணிப்பாளர் அளித்த பதிலில் திருப்தியடையாதவர்கள் மட்டும் மீண்டும் தங்களது குறைகளை அனுப்ப வேண்டும். இந்தமுகாமில் புதிதாக பெறப்படும் புகார்களின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது. புகார்களை தபால் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். தனியார் கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும் புகார்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

வாடிக்கையாளர்கள் தங்களது குறைகளை தபால் சேவை குறைதீர்க்கும் முகாம், உதவி இயக்குனர், தென் மண்டல தபால்துறைத்தலைவர் அலுவலகம், மதுரை2 என்ற முகவரிக்கு வருகிற 8ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும். தபால் உறையின் மீது, "தபால் சேவை குறை தீர்க்கும் முகாம் மார்ச் 2025" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவர்க்கரின் புண்ணிய திதியில் அஞ்சலியை செலுத்துகிறோம் கவர்னர் ஆர்.என்.ரவி



சென்னை, பிப்.28

சுதந்திர போராட்ட வீரர் விநாயக் தாமோதர் சாவர்க்கர், அசாத்திய தேசபக்தர் என்றும் அச்சமற்ற புரட்சியாளர் என்றும் சமூக நீதிக்கான வீரர் என்றும் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி புகழாரம் செலுத்தி உள்ளார்.

இது தொடர்பாக தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி எக்ஸ் தள பதிவில்,

சுதந்திர போராட்ட வீரர் விநாயக் தாமோதர் சாவர்க்கர் அவர்களின் புண்ணிய திதியில் அவருக்கு நெஞ்சார்ந்த அஞ்சலியை செலுத்துகிறோம். அசாத்திய தேசபக்தர், அச்சமற்ற புரட்சியாளர் மற்றும் ஆழ்ந்த தொலைநோக்குப் பார்வை கொண்ட அவர், மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் அந்தமான் செல்லுலார் சிறைச்சாலை மற்றும் ரத்னகிரியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சொல்லொணா கொடுமைகள் மற்றும் சித்ரவதைகளை அனுபவித்தார். ஒரு சிறந்த தேசியவாதியாக, பிரிட்டிஷ் ஆளுகை எதிர்ப்புணர்வுத் தீயை மூட்டி எண்ணற்ற சுதந்திரப் போராளிகளை ஊக்கப்படுத்தினார்.

சமூக நீதியின் சிறந்த வீரராக அவர் ஜாதிய பாகுபாட்டுக்கு எதிராக அயராது போராடி, ஏராளமான சமூக சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாக விளங்கினார். போற்றுதலுக்குரிய பாரம்பரியத்தில் ஊறிப்போன நம்பிக்கை, பெருமை மற்றும் முற்போக்கான பாரதத்தை ஊக்குவிக்கும் வகையில் அவரது நீடித்த மரபு வழிகாட்டும் சக்தியாக தொடர்ந்து நீடிக்கும் என பதிவிட்டுள்ளார்.

## வனவாசியில் கர்ப்பிணி பெண்களுக்கான வளைகாப்பு விழா சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் தொடங்கி வைத்து வழங்கினார்

மேட்டூர்அருகேவனவாசி தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவை சேலம் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.செல்வ கணபதி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார். இதில் புடவை, வளையல், பழங்கள், மஞ்சள், குங்குமம் அடங்கிய சீர்வரிசைகளை டி.. எம். செல்வ கணபதி வழங்கினார். அதனைத் தொடர்ந்துஐந்துவகையான உணவுகள் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் அர்த்தநாரீஸ்வரன், எடப்பாடி நகர்மன்ற தலைவர் பாட்ஷா, வீரக்கல் புதூரர் பேரூர் செயலாளர் முருகன், கொளத்தூர் ஒன்றிய செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, கவுன்சிலர் கிருஷ்ணவேணி, மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசை தேச விரோத அரசு எனக் கூறுவதா? அமித்ஷாவுக்கு செல்வப்பெருந்தகை கண்டனம்



சென்னை, பிப்.28

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

கோவையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேசவிரோத ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் நேரம்நெருங்கிவிட்டதாக கூறிய மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவிற்கு வன்மையான கண்டனங்களைதெரித்துக் கொள்கிறேன்.

நாட்டில்உள்ளமக்களை மதம், மொழி என்று பிளவுப்படுத்தி ஆட்சி செய்கிறது பா.ஜ.க. மேலும், பாஜக ஆளாத மாநிலங்களை கவர்னர்களை வைத்து போட்டி அரசாங்கம் நடத்த முயற்சி செய்கிறது. மாநில அரசின் அரசியல் அதிகாரங்களை தன்னகத்தே குவிப்பதற்கு சட்ட வரைவு மசோதாக்களை திருத்துகிறது பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் இவர்களின் சூழ்ச்சிகளை புரிந்து கொண்ட காரணத்தால், ஒரு நாடாளுமன்ற தொகுதியில் கூட வெற்றியைக் கொடுக்காமல் தேர்தலில் விரட்டியடிக்கிறார்கள். நாள்தோறும் மக்கள் நலனுக்கு திட்டங்களை தீட்டி நல்லாட்சி தந்து கொண்டிருக்கிறார் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்.

மக்கள் விரோத கொள்கைகளை கொண்டிருக்கும் பா.ஜ.க.வினரின் முகமூடியை மக்களிடம் தோலுரித்துக்காட்டினால், ஆளும் தமிழ்நாடு அரசை தேச விரோத அரசு எனக்கூறுவதா?. என தெரிவித்துள்ளார்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சாலைபாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

## மார்ச் 5ல் அனைத்துக் கட்சி கூட்டம்: 45 கட்சிகளுக்கு அழைப்பு



சென்னை, பிப்.28

மத்திய அரசு தொகுதி மறுசீரமைப்பு செய்யும்போது தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையைகுறைக்க திட்டமிட்டுள்ளதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று குற்றம்சாட்டி இருந்தார். மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால் 39 நாடாளுமன்ற தொகுதிகளில் 8 எம்.பி. தொகுதிகள் குறைந்துவிடும் என்றும் கூறி இருந்தார். நாடாளுமன்றத்தில் நமக்கானபிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்பதோடு தமிழ்நாட்டின் குரல் நசுக்கப்படுவதாக அமைந்துவிடும் இது வெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பற்றிய கவலை மட்டுமல்ல, நம் மாநிலத்தின் உரிமை சார்ந்தது என்றும் அவர் கூறி இருந்தார். தமிழ்நாடு எதிர்கொள்ள இருக்கும் இந்த முக்கியமான பிரச்சினை குறித்து விஆதிக்க தேர்தல் கமிஷனில் பதிவு பெற்றுள்ள 45 கட்சிகளை அழைத்து அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தை வருகிற 5ம் தேதி தலைமைச்செயலகத்தில் கூட்டி உள்ளதாக முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் கூறி இருந்தார்.

இப்போது இந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் 45 கட்சிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளதாக தெரியவந்துள்ளது.அதில்,

1 திராவிட முன்னேற்றக் கழகம்

2 இந்திய தேசிய காங்கிரஸ்

3 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

4 இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)

5 இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 6 ம.தி.மு.க

7விடுதலைசிறுத்தைகள் கட்சி 8 மனிதநேய மக்கள் கட்சி

9 அகில இந்திய பார்வர்டு பிளாக்

10 தமிழக வாழ்வுரிமை கட்சி

11 மக்கள் நீதி மய்யம்

12 கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி

13 ஆதி தமிழர் பேரவை

14 முக்குலத்தோர் புலிப்படை 15 மூவேந்தர் முன்னேற்றக் கழகம்

15 மூவேந்தர் முன்னேற்றக் கழகம்

17 அ.இ.அ.தி.மு.க

18 பாட்டாளி மக்கள் கட்சி

19 தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்)

20 தேசிய முற்போக்கு திராவிட கழகம்

21 அம்மா மக்கள் முன்னேற்ற கழகம்

22 பாரதிய ஜனதா கட்சி

23 தமிழக வெற்றிக் கழகம்

24 நாம் தமிழர் கட்சி

25 புதிய தமிழகம்

26 புரட்சி பாரதம் கட்சி

27 தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம்

28 புதிய நீதிக் கட்சி

29 இந்திய ஜனநாயகக் கட்சி

30 இந்திய சோஷியல் டெமாக்ரடிக் பார்ட்டி

31 மனிதநேய ஜனநாயகக் கட்சி

32 இந்திய மக்கள் கல்வி .மு.க

33 பெருந்தலைவர் மக்கள் கூட்சி

34 அனைத்து இந்திய மூவேந்தர்.மு.க.

35 பசும்பொன் தேசிய கழகம் 36 அகில இந்திய மஜ்லிஸ் இ இத்தேஹாதுல் முஸ்லீமின்

37 தமிழக மக்கள் ஜனநாயககட்சி

38 கலப்பை மக்கள் இயக்கம்

39 பகுஜன் சமாஜ் கட்சி

40 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ் லெமினிஸ்ட் விடுதலை

41 ஆம் ஆத்மி கட்சி

42 சமதா கட்சி

43 தமிழ் புலிகள் கட்சி

44 கொங்கு இளைஞர் பேரவை

45 இந்திய குடியரசு கட்சி ஒவ்வொரு கட்சிக்கும் அமைச்சர்கள் நேரில் சென்று அழைப்பு கொடுக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# திருப்பூர்: கத்தியை காட்டி மிரட்டி தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட 3 பேர் கைது



திருப்பூர்:பிப்-28 திருப்பூரில் பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டி தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். திருப்பூர் சந்திராபுரம் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேசன் (25). இவர் பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில், சந்திராபுரம் அம்மா உணவகம் அருகே நடந்து சென்றபோது, எதிர் திசையில் நடந்து வந்த 3 பேர், வெங்கடேசனிடம் கத்தியை காட்டி மிரட்டி அவரிடம் இருந்து அலைபேசி மற்றும் ரூ.2 ஆயிரத்தை பறித்துக்கொண்டு தப்பினர். இது குறித்து வெங்கடேசன் நல்லூர் போலீஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், இது தொடர்பாக வழக்குப் பதிவு காவல் உதவி ஆணையர் விஜயலட்சுமி தலைமையிலான தனிப்படை போலீஸார், அய்யம்பாளையத்தை சேர்ந்த மணிகண்டன் (28), கல்லூரி சாலையை சேர்ந்த பாலாஜி சரவணன் (28) மற்றும் திருமுருகன்பூண்டியை சேர்ந்த ராம்குமார் (28) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரித்த போது மூன்று பேரும் பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டி பணம் செல்போன் பறிப்பதை தொடர்கதையாக வைத்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து, 3 பேரையும் திருப்பூர் சிறையில் அடைத்தனர். இதேபோல் மத்திய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பயங்கர ஆயுதங்கள் நேற்று (பிப்.25) இரவு கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்த 6 இளைஞர்கள் போலீஸாரால் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அரசு மருத்துவமனைகளில் உள்ள 425 மருந்தாளுநர் பணியிடங்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்



சென்னை:பிப்-28 அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 425 மருந்தாளுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்று மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (எம்ஆர்பி) தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எம்ஆர்பி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 425 மருந்தாளுநர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்கு www.mrb.tn.gov.in என்ற இணையதளத்தில் மார்ச் 10-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். ஒரு மணி நேரம் தமிழ் மொழி தகுதி தேர்வும் (10-ம் வகுப்பு வரையிலான பாடத்திட்டம் அடிப்படையில்), 2 மணி நேரம் கணினி வழியில் மருந்தியல் தேர்வும் நடைபெறும். தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்ப கட்டணமாக எஸ்சி, எஸ்சி-ஏ, எஸ்டி, மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.500, மற்றவர்களுக்கு ரூ.1,000 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வயது வரம்பு, ஊதியம், ஆன்லைனில் விண்ணப்பிக்கும் வழிமுறை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் இணையதளத்தில் அறியலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவை அதிமுக எம்எல்ஏ வீட்டில் லஞ்ச ஒழிப்புப் போலீஸார் சோதனை



கோவை :பிப்-28 வருமானத்துக்கு அதிகமாக ரூ.2.75 கோடி சொத்து குவித்ததாக கோவை அதிமுக எம்எல்ஏ வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் இன்று (பிப்.25) காலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர். கோவை மாநகர மாவட்ட அதிமுக செயலாளராக இருப்பவர் அம்மன் கே.அர்ச்சுனன். கடந்த 2021 தேர்தலில் போட்டியிட்டு வென்ற இவர் கோவை வடக்கு தொகுதி அதிமுக எம்.எல்.ஏவாக உள்ளார். இதற்கு முன்பு 2016-21 காலகட்டத்தில் கோவை தெற்கு தொகுதி அதிமுக எம்.எல்.ஏவாக இருந்தார். இவரது மனைவி விஜயலட்சுமி. எம்.எல்.ஏ அம்மன் அர்ச்சுனன் சுண்டக்காமுத்தூர் சாலை மூன்றாவது வீதி, திரு நகரில் உள்ள தனது வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இந்நிலையில் இன்று காலை 6 மணி அளவில் கூடுதல் எஸ்பி திவ்யா தலைமையிலான கோவை மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸார் எம்எல்ஏ அம்மன் கே.அர்ச்சுணன் வீட்டிற்கு வந்தனர். வெளியாட்கள் உள்ளே நுழையவும், வீட்டில் இருப்பவர்கள் வெளியே செல்லவும் தடை விதித்தனர். வீட்டிலிருந்து அம்மன் கே. அர்ச்சுனனிடம் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக உங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, அதன் அடிப்படையில் உங்களது வீட்டில் சோதனை நடத்த வந்துள்ளதாக போலீஸார் தெரிவித்தனர். தொடர்ந்து போலீஸார் சோதனைக்கு நடத்துவதற்கு அவரும் ஒத்துழைத்தார். எம்எல்ஏ வீட்டின் முன்பு குவிந்த கட்சியினர். தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீஸார் அவரது வீட்டில் ஒவ்வொரு அறையாக சென்று சோதனை நடத்தினர் . வீட்டில் இருந்த ஆவணங்களை கைப்பற்றி அது தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்டு விசாரித்தனர். சோதனை குறித்து தகவல் அடைந்த அதிமுக கட்சி நிர்வாகிகள் தொடர்ந்து அவரது வீட்டுக்கு முன்பு குவிந்தனர். இவரது வீட்டு முன் பகுதியில் உள்ள ஒரு அறையில் தனி அலுவலகமும் உள்ளது, அங்கும் போலீஸார் சோதனை நடத்தினர். முன்னதாக எம்எல்ஏ அம்மன் கே.அர்ச்சுனன் மீதும்,அவரது மனைவி விஜயலட்சுமி மீதும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கோவை மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று வழக்கு பதிந்தனர். அதில் 2016-ம் ஆண்டு மே மாதம் முதல் 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.2 கோடியே 75 லட்சத்து 78 ஆயிரத்து 962 ரூபாய் சொத்து சேர்த்துள்ளதாக போலீஸாரின் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சோதனை நடத்துவதை ஒட்டி அவரது வீட்டு முன்பு போலீஸார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.


# மனிதனின் உண்மையான சுதந்திரம் எது?



ஒரு மனிதர் முழு விழிப்புணர்வுடன் வாழ்ந்தால், எவ்வித கட்டமைப்புகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் மனதளவில் சுதந்திரமாக சிந்திக்க முடியும். புற உலகிலும் சுதந்திரமாக செயல்பட முடியும். இதுவே மனிதனின் உண்மையான சுதந்திரம். மனித வாழ்க்கை ஒரு புதிரான நாவல் போன்றது. நாம் எப்போது, எங்கே பிறக்க வேண்டும் என்று தேர்வு செய்ய முடியாது. எப்போது, எவ்வாறு மரணிக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்க முடியாது. இவை இரண்டும் நம்முடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. இந்த இரண்டு எல்லைகளுக்கிடையே உள்ள வாழ்க்கையை மட்டும் நம் விருப்பம் போல் சுதந்திரமாக வாழ முடியும் என்று நம்புகிறோம்.

# பாண்டிராஜ் - விஜய் சேதுபதி படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசை!





பாண்டிராஜ் இயக்கியுள்ள படத்தின் இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் பணிபுரியவுள்ளார். பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிவுற்றது. இதன் இறுதிகட்டப் பணிகள் விரைவில் தொடங்கவுள்ளது. சத்யஜோதி நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்துக்கு இசையமைப்பாளர் ஒப்பந்தம் செய்யப்படாமல் இருந்தது. தற்போது இப்படத்தின் இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். பாண்டிராஜ் - சந்தோஷ் நாராயணன் இணையும் முதல் படமாக இது அமைந்துள்ளது. விரைவில் இந்தக் கூட்டணி குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது. இன்னும் இப்படத்துக்கு பெயரிடப்படவில்லை. பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நித்யா மேனன், செம்பியன் வினோத் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடித்துள்ளனர். ஒளிப்பதிவாளராக சுகுமார் பணிபுரிந்துள்ளார். இதன் பணிகளை முடித்துக் கொடுத்துவிட்டதால் அடுத்ததாக பாலாஜி தரணிதரன் இயக்கவுள்ள படத்துக்கு தேதிகள் ஒதுக்கியுள்ளார் விஜய் சேதுபதி.

# நல்ஆரோக்கியம் அருளும் பண்ருட்டி தன்வந்திரி பெருமாள்

மனிதனுக்கு உண்மையான செல்வம், நோய் நொடி இல்லாத வாழ்க்கை தான் என்று ஆன்றோர் பெருமக்கள் கூறுவர். மகாவிஷ்ணுவின் அம்சமான தன்வந்திரி பகவான், வேதங்களின் காவலர், தேவர்களின் மருத்துவர், ஆயுர்வேத மருத்துவத்தின் இறைவன் என்று போற்றப்படுகிறார். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பண்ருட்டியில் வாழ்ந்த பெருமாள் பக்தர் ஒருவர் பல ஊர்களுக்குச் சென்று பெருமாளை தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.



# இங்கிலாந்துக்கு என்னதான் ஆச்சு? - ஆப்கனிடம் ஆட்டமிழந்த விதமும், எதிர்பார்த்த தோல்வியும்!

லாகூரில் இங்கிலாந்து அதிர்ச்சித் தோல்வி என்று பாப்புலர் ஊடகங்கள் தலைப்பு வைத்து எழுதும் காலம் முடிந்து விட்டது. இனி இங்கிலாந்து வென்றால் எதிரணி அதிர்ச்சித் தோல்வி என்றுதான் டைட்டில் வைக்க வேண்டும். அல்லது, இங்கிலாந்து அதிர்ச்சி வெற்றி என்றுதான் எழுத வேண்டும். அந்த அளவுக்கு இங்கிலாந்து வெள்ளைப் பந்து கிரிக்கெட்டையும், குறிப்பாக துணைக் கண்டத்தில் ஆடுவதையும் கேலிக்கூத்தாக்கி வருகின்றனர். ஆப்கான் கேப்டன் நேற்று மிகத் துல்லியமாக டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்தார். அன்று ஆஸ்திரேலியா இங்கிலாந்தின் 350 ரன்களை விரட்டிய அதே பிட்ச்தான் இதுவும். இருந்தும் இங்கிலாந்தினால் 325 ரன்களை சேஸ் செய்ய முடியவில்லை. 2023 உலகக் கோப்பையில் டெல்லியில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து, ஆப்கானிஸ்தானின் 285 ரன்கள் இலக்கை விரட்ட முடியாமல் 215 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இப்போது மீண்டும் ஒரு ஐசிசி தொடரில் தொடர்ச்சியாக 2-வது முறை ஆப்கனிடம் தோல்வி அடைந்துள்ளது இங்கிலாந்து. ரவி சாஸ்திரி அருமையாக ஒரு வார்த்தை சொன்னார், 'துணைக் கண்ட கிரிக்கெட்டை சீரியஸாக எடுத்துக் கொள்ளாதவரை இது போன்ற தோல்விகளை ஜீரணித்துத்தான் ஆக வேண்டும்' என்று இங்கிலாந்தைத் தாக்கினார். இங்கிலாந்து நேற்று அணி ஆப்கானிஸ்தானை 37/3 என்ற நிலையில் இருந்து எழும்ப விட்டது. ஆனால் இப்ராஹிம் சத்ரான் ஆடிய இன்னிங்ஸ் உண்மையில் ஒரு மகத்தான ஐசிசி தொடர் இன்னிங்ஸ் என்றால் மிகையாகாது. கோலிகளையும் ரூட்களையும், ஸ்மித்களையும் பேசும் காலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இப்ரஹிம் ஜத்ரான் மிக அருமையான ஒரு இன்னிங்ஸைக் கட்டமைத்தார். அதாவது, ஜோப்ரா ஆர்ச்சரின் ஆக்ரோஷத்தில் 3 விக்கெட்டுகளை பவர் ப்ளேயிலேயே இழந்து விட்டது. ஆனால் அதன் பிறகு கோட்டை விட்டது இங்கிலாந்து. எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. பட்லரின் கேப்டன்சி ஏதோ ஒரு விதத்தில் பிற்கால தோனியை நினைவூட்டியது.



ஹஸ்மத்துல்லா ஷஹீதியும், இப்ராஹிம் ஜத்ரானும் உறுதியின் திலகமாக 103 ரன்களை 4வது விக்கெட்டுக்காகச் சேர்த்தது உண்மையில் இங்கிலாந்துக்கான பேட்டிங் பாடமே. கடைசியில் முகமது நபி 24 பந்துகளில்ஆடிய இன்னிங்ஸூம் அவர்களது உறுதிப்பாட்டுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஜத்ரான் பென் டக்கெட்டின் 165 ரன்கள் ரெக்கார்டை 2 நாட்களில் முறியடித்து புதிய சாம்பியன்ஸ் டிராபி சாதனையைப் படைக்கும் விதமாக 146 பந்துகளில் 12 பவுண்டரிகள் 6 சிக்சர்களுடன் 177 ரன்களை விளாசினார். ஆல் டைம் கிரேட் இன்னிங்ஸ்களில் இதற்கு டாப் 3 இடங்களில் ஒன்றை தாரளமாக அளிக்கலாம். கடைசி 10 ஓவர்களில் 113 ரன்கள் விளாசப்பட்டது. அனைத்து இங்கிலாந்து பவுலர்களும் சாத்தி எடுக்கப்பட்டனர். இங்கிலாந்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்த விதம்: முதலில் பில் சால்ட் நேராக வந்த பந்தை அசிங்கமாக மிட் விக்கெட் மேல் தூக்கி அடிக்கும் ஒரு தெரு கிரிக்கெட் ஷாட்டை ஆடி பவுல்டு ஆனார். பென் டக்கெட் மீண்டும் அபாயகரமாகத் திகழ்ந்தார், ஆனால் அவர் 38 ரன்களில் ரஷீத் கான் பந்தில் ஏமாந்தார். ஃபுல் லெந்த் பந்தை கால்காப்பில் வாங்கினார், பிளம்ப் இன் ஃப்ரண்ட். ஆனால் நடுவர் கொஞ்சம் விளையாடப் பார்த்து அவுட் இல்லை என்றார், ஆனால் ரிவியூ செய்தது சரியாக அமைந்து டக்கெட் காலி. ஜேமி ஸ்மித் அலட்சியமாக முகமது நபியைக் கருதி இறங்கி வந்து சுற்றப்போக பந்து பாயிண்டில் கேட்ச் ஆனது. இதுவும் அந்த சமயத்தில் தேவையில்லாத ஷாட். ஹாரி புரூக் மைதானத்தில் எங்கு வேண்டுமானாலும் அடித்து அனுப்ப வேண்டிய பந்தை எப்படி பவுலர் நபி கையிலேயே கேட்ச் ஆகுமாறு அடித்தார் என்பது இங்கிலாந்தின் அலட்சிய பேட்டிங்கிற்கு இன்னொரு எடுத்துக்காட்டு. ஜாஸ் பட்லர் ஒருமுறை பிளம்ப் இன் ஃபிரண்ட், சரியான எல்.பி. ஆனால் நடுவர் மீண்டும் விளையாடும் விதமாக நாட் அவுட் என்றார். அது கடைசியில் அம்பயர்ஸ் கால் என்று ஆனது. அப்படி என்றால் நடுவர் அவுட் கொடுத்திருக்க வேண்டிய பந்துதான் அது. இந்த வாய்ப்பையும் பட்லர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர் அஸ்மத்துல்லா ஓமர்சாயின் அட்டகாசமான நல்ல திசையில், பட்லர் உடலுக்கு நேராக வீசிய ஷார்ட் பிட்ச் எகிறு பந்தை சரியாக அடிக்க முடியாமல் கேட்ச் ஆனார். ரொம்ப நேரமாகக் கொண்டு வராத குல்பதின் நயீப் ஒரு பந்தை ஆஃப் ஸ்டம்புக்கு வெளியே வீசடெம்ப்ட் ஆனலிவிங்ஸ்டன் கட் ஆட முயன்று எட்ஜ் செய்து வெளியேறினார். ஜோ ரூட் நின்றிருந்தால் நிச்சயம் இங்கிலாந்தை வெற்றிக்கு இட்டுச் சென்றிருப்பார், ஆனால் அவருக்கும் டெம்பரமெண்ட் இல்லை. அப்போதுதான் ஓமர்சாய் அட்டகாசமாக ஒரு ஷார்ட் பிட்ச் எகிறு பந்தை வீசினார். நல்ல முயற்சியுடன் வீசிய பந்து இது. ரூட் தேர்ட் மேன் மேல் அடிக்க நினைத்து எட்ஜ் செய்து வெளியேறினார். அதோடு இங்கிலாந்தின் வெற்றி வாய்ப்பும் அரிதானது. கடைசியில் ஜேமி ஓவர்டன் ஓமர்சாயின் அட்டகாசமான ஸ்லோ பந்திற்கு அபாயகரமான 32 ரன் இன்னிங்சில் முடிந்தார். ஆக்ரோஷம் காட்டிய ஜோப்ரா ஆர்ச்சர் ஃபரூக்கியின் ஸ்லோ பந்தை நேராகக் கையில் அடித்து முடிந்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066